### 4. அறிக்கை அளித்தல்

### விதி 107 (1)ன்கீழ் திருத்த அறிக்கை

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 20-3-82 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை வினா (புதிய எண். 582, பழைய எண். 10076) விற்கு பதிலளிக்கையில் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் எழுப்பியதுணை வினாவிற்கு கீழ்கண்டவாறு பதிலளித்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் 25, 86, 200ரூபாய்க்கு இப்போதுள்ள மதிப்பிட்டில் அழகுபடுத்துவதாக இருக்கிறது. அதில் ஒப்பன் ஏர் தியேட்டர்திறந்த வெளி திரை அரங்கத்திற்கு 3, 15, 000 ரூபாய் மதிப்பீட்டிலே செலவிடுவதாக இருக்கிறது.

மேற் கூறியவற்றிற்குப் பதிலாக கீழ்க்கண்டவாறு எனது பதிலை திருத்திக்கொள்ள விழைகிறேன்.

சீரணி அரங்கத்திலிருந்து வெளியே செல்ல மணலின் நிறத்தோடு பொருந்தும் நிறத்தில் சிமின்ட் கான்கிரிட் சாலை அமைப்பதற்கு ரூபாய் 1,10,000 க்கும், கடற்கரை மணற் பரப்பில் அழகிய வடிவமைப்புடன் கூடிய குப்பைத் தொட்டிகளை வைக்க ரூபாய் 8,500 க்கும் மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளது. மற்றத் திட்டங்களுக்குத் தேவையான மதிப்பீடுகள் இன்னும் கட்டிடத் தலைமை பொறியாளரிடமிருந்து வரவில்லை. திறந்தவெளி கலையரங்கம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. அதற்குப் பதிலாக சீரணி அரங்கத்திலேயே கல்வி சம்பந்தப்பட்ட படக்காட்சிகளும் கார்டூன் படக்காட்சிகளும் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்

### கவன ஈர்ப்புகள்

#### (அ) சோத்துக்கண்ணிக்கு தனி பாடசாலை

திரு. பெ. சு. திருவேங்கடம் பேரவைத தலைவர் அவர்களே வட ஆற்காடு கலசபாக்கம் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம் சோத்துக்கண்ணி கிராம மக்கள் தனியாக பாடசாலை கோரி, படிக்கும் பிள்ளைகளை நிறுத்தி விட்டதால், 6 மாத காலமாக 100க்கு மேற்பட்ட குழந்தைகளின் கல்வியும் மதிய உணவும் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.